# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
**Tele :** 04630 - 256157

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.

## கர்த்தருக்குரிய தசமபாகம் சபைக்காலங்களில் யாருக்குரியது?

1. எனக்குப் பிரியமும் வாஞ்சையுமானவர்களே, நம்மை வழுவாதபடி காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடே நம்மை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ள இரட்சகரான தேவனுக்குக் கனமும், மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்
பிதாவாகிய தேவனுடைய முன்னறிவிப்பின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்படிதலுக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.

2. பிரியமானவர்களே, 2001ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் **தசமபாகம் மற்றும் காணிக்கைகள்** குறித்து ஒரு செய்தித்தொகுப்பு எழுதினேன். இதனுடைய பிரதி யாருக்கும் தேவைப்படுமாயின் எனக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம். இதில் கர்த்தருக்குரிய தசமபாகமானது பழையஏற்பாடு காலத்தில் லேவியக்குரியதாக இருந்தது. சபைக்காலத்தில் அது பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஐந்துவகை ஊழியத்துக்கும் உரியதாகும் என எழுதினேன். சென்னை, பல்லாவரம் பாஸ்டர் தங்கமணி சபையில் இதுகுறித்து நான் பிரசங்கித்தபடியினால், மறுமுறை சபையில் அனுமதிக்கப்படவில்லை. ஜப்பானில் வேலைபார்த்து வந்த சென்னைவாழ் சகோ.ரவிக்குமார் ஆறு ஆண்டு காலங்களில் ரூ.6,00,000/- தசமபாகமாக இந்த சபைக்குக் கொடுத்து, அந்தப் பணத்தில் ஒரு ஆலமரம் பல விழுதுகள் விட்டு, பல கிளைகளுடன் வளர்ந்து, பல பறவைகளுக்கு ஒரு சரணாலயமாக இருக்கும் என எண்ணினேன். ஆனால் சென்னை வந்தபொழுது நான் கண்ட காட்சி, அங்கு ஆலமரவிதை விதைக்கப்பட்ட இடத்தையே காணவில்லை எனக் கூறி என்னிடம் புலம்பினார். அடுத்து திருச்சியில் பாஸ்டர் சாலொமோன் சபையில் பிரசங்கித்தேன், பாஸ்டர் சபைக்கூடுதலின் முடிவு ஜெபத்தில் நாம் சபைக்கு வரும் தசமபாகத்தை ஐந்துவகை ஊழியங்களுக்கும் பகிர்ந்துகொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம் என ஜெபித்தார். மற்றும் ஒரு சில சபைகளில் இது குறித்துப் பேசினேன், யாரும் என்னிடம் எதுவும் வினாவவில்லை. ஆனாலும் ஒரு பாஸ்டர் கர்த்தருக்குரிய தசமபாகம் சபை பாஸ்டருக்கு மட்டுமே உரியது, இதில் இதர ஊழியங்களுக்கு பங்கு என்ற பேச்சுக்கே இடமில்லை எனத் தான் உறுதியாக இருப்பதாகக் கூறினார்.

3. வேதவாக்கியங்களின் அடிப்படையில் சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்கு ஊழியர்கள் அனுப்பப்படுகிறார்கள். சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட, நியமிக்கப்பட்ட, ஏற்படுத்தப்பட்ட பாத்திரங்கள் அப்போஸ்தலர்கள் மற்றும் சுவிசேஷகர்கள். இது பாஸ்டர்களின் (மேய்ப்பர்களின்) பணியல்ல. அப்போஸ்தலர்களும், சுவிசேஷகர்களும் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்தஆவியினாலே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க, ஜனங்கள் கேட்கிறார்கள். விசுவாசம் கேள்வியினாலே (கேட்பதினாலே) வரும். கேள்வி (கேட்பது) தேவனுடைய வசனத்தினாலே வரும். நித்தியஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் பிரசங்கத்தைக் கேட்க, தேவன் அவர்கள் உள்ளத்தில் விசுவாசத்தைத் தொடங்க, அவர்கள் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறார்கள். ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயும் இருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லோரும் கீழ்ப்படியவில்லை. இதுகுறித்து ஏசாயா கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? என்று சொல்லுகிறான். விசுவாசத்தை சாந்தமாய் பெற்றுக்கொண்டவர்கள், இருதயத்தில் குத்தப்படுகிறார்கள். அவ்வாறாக குத்தப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி தங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். பின் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோநியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய்த் தரித்திருக்கிறார்கள். இவர்கள் தேவனைக் குறித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருக்கிறார்கள். இவ்வாறாக இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார். ரோ.10:13-18, 1பேது.1:12, எபி.12:1, ஏசா.52:7, அப்.13:48, யாக்.1:21, ஏசா.53:1 & அப்.2:38-47.

4. ஆனால் இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் எனக்கூறிக்கொண்டும், தங்களை பாஸ்டர் என அழைத்துக்கொண்டும் பலர் வியாதிகளிலிருந்து விடுதலை, பில்லிசூனியக்கட்டிலிருந்து விடுதலை, கடன் பிரச்சனைகளிலிருந்து விடுதலை, ரவுடிகளின் தொல்லையிலிருந்து விடுதலை, பணப்பற்றாக்குறையிலிருந்து விடுதலை எனக்கூறிக்கொண்டு ஊர்ஊராக, தெருத்தெருவாக, வீடுவீடாக தங்கள் மனைவியுடனோ அல்லது தனியாகவோ சுற்றித்திரிந்து, உறுதியில்லாத ஆத்துமாக்களை தந்திரமாகப்பிடித்து, அவர்களை இம்மைக்குரிய நன்மைகளுக்காகமாத்திரம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மேல் நம்பிக்கையுள்ளவர்களாக்கி (1கொரி.15:19), செம்மையான வழியைவிட்டு தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமைப் போன்று பொருளாசையில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகளாகிய இவர்கள் அநீதியின் கூலியை விரும்பி தாங்கள் ஆதாயப்படுத்தின ஆத்துமாக்களுக்கு தண்ணீர் ஞானஸ்நானம் கொடுத்து, அவர்களை தங்கள் சபைகளில் சேர்த்து, அவர்கள் கொடுக்கும்

தசமபாகம், காணிக்கைகளைக் கொண்டு, சோம்பலின் அப்பத்தைத் தின்று தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறார்கள். இவர்கள்தான் எங்கள் சொந்த முயற்சியினால் நாங்கள் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினோம், இந்த ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த நாங்கள் எத்தனையோ நாட்கள் உபவாசம் செய்து இவர்களுடைய வியாதிகள், பிரச்சனைகள் நீங்க ஜெபித்து விடுதலைத் தேடிக்கொடுத்தோம், இப்பொழுது இவர்களை மேய்த்துவருகிறோம், மந்தையின் பாலைக் குடித்துவருகிறோம் எனக்கூறி, ஐந்துவகை ஊழியங்களையும் தங்கள் கரங்களில் கொண்டு, ஸ்தாபனசபை ஊழியர்கள் போன்று ஒரு கூட்டம் ஜனங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு, அவர்களை ஒரு வேலிக்குள் அடைத்து, அவர்களை வெளியே எங்கும் செல்லவிடாதபடி தடுத்து, அவர்களை இறுமாப்பாய் ஆளுகை செய்கிறார்கள். இவர்கள் நிச்சயமாக ஒரு ஆத்துமாவை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிறார்கள். ஆனால் அந்த ஆத்துமாவை மெய்யான ஆத்தும இரட்சிப்புக்குள் வழிநடத்துவ தில்லை. இவ்வாறாக ஆத்தும ஆதாயம் செய்து, சபை நடத்துகிறவர்கள் தான் கர்த்தருக்குரிய தசமபாகம் பாஸ்டர்களுக்கு மட்டுமே என வாதாடுகிறார்கள். இவர்களது ஊழியம் ஊழியமேயல்ல. ஏனென்றால் பாஸ்டராக கர்த்தர் இவர்களை தம்முடைய சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காக ஏற்படுத்தினார் எனக் கூறிக்கொண்டு (எபே.4:13) நான் ஒரு விக்ரகாராதனைக் காரனை, ஒரு முஸ்லீம் மார்க்கத்தானை ஆதாயப்படுத்தினேன், எனது ஊழியம் இந்துக்கள் மத்தியில், முஸ்லீம்கள் மத்தியில் எனக் கூறுகிறார்களே! இது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்திக்கு ஊழியமா? இல்லவேயில்லை. இவர்கள் தாறுமாறாக நடக்கிறவர்கள். நிச்சயமாக இப்படிப்பட்ட ஊழியம் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியம் அல்ல.

5. ஸ்தாபன சபை ஊழியர்கள் மற்றும் தனித்து ஊழியம் செய்யும் ஊழியர்கள் கிறிஸ்துவைக் குறித்து அறியாத மக்கள் மத்தியில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, இம்மைக்குரிய நன்மைகளுக்காக ஜனங்களை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தி, அவர்களை ஸ்தாபனசபைகளில் சேர்க்கிறார்கள். ஆனால் எபே.4:13ல் கூறப்பட்டுள்ள முதல் மூன்று வகை ஊழியர்கள் பலத்த சத்தமிட்டு பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்தஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிருக்கிற ஸ்தாபனசபைகளை விட்டு வெளியே வாருங்கள் என்று அழைக்கிறார்கள். ஸ்தாபனசபைகளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்து, பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம் பண்ணினார்கள், பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச்செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள். ஆதலால் என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள் என்று அழைக்கிறார்கள். வெளி.18:2-4. இவ்வாறாக வெளிவந்த அனைவரும் தேவனுடையகுமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் கர்த்தர் ஐந்துவகையான ஊழியங்களை ஏற்படுத்தினார். ஐந்துவகை ஊழியத்தில் முதல் மூன்றுவகை ஊழியத்தின் மூலமாக ஸ்தாபன சபைகளிலிருந்து வெளியே வந்த மக்கள் ஆங்காங்கு மந்தைகளாக தனித்தனியே பாஸ்டர்களுடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார்கள். மேய்ப்பர்கள் தங்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்ட மந்தையை ஐந்துவகை ஊழியங்களைக் கொண்டு போஷிக்கிறார்கள்.

6. உதாரணமாக சகோ.மோகன்.சி லாசரஸ், சகோ.D.G.S. தினகரன் போன்ற ஊழியர்கள் கிறிஸ்துவைக் குறித்து அறியாத மக்கள் மத்தியில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஆத்தும ஆதாயம் செய்து ஸ்தாபனசபைகளில் சேர்க்க, என்னைப்போன்ற சுவிசேஷகர்கள் ஸ்தாபனசபைகள் மத்தியிலி ருந்து ஜனங்களை வெளியே அழைத்து, அவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்துகிறார்கள். மேலும் அந்த ஆத்துமாக்களை எபே.4:13ல் கூறப்பட்ட மேய்ப்பனிடம் (பாஸ்டரிடம்) ஒப்படைக்க அவர்கள் ஐந்து வகை ஊழியங்களைக் கொண்டு மந்தையை பக்திவிருத்தி அடையச்செய்கிறார்கள். ஆக, சுவிசேஷ ஊழியம் என்பது ஒரு மேய்ப்பன் (பாஸ்டர்) பணியல்ல. மந்தையை வழிநடத்துவது தான் மேய்ப்பனின் பணி.

7. இங்கு கர்த்தருக்குரிய தசமபாகம் ஐந்துவகை ஊழியங்களுக்கும் உரியது என்பது குறித்து சற்று விளக்கமாக, விபரமாக தியானிப்போம். பழையஏற்பாடு காலத்தில் பன்னிரு கோத்திரத்தில், லேவி கோத்திரத்தை மாத்திரம் கர்த்தர் தமக்கென்று பிரித்தெடுத்தார். இந்த லேவியர் ஆசாரியனாகிய ஆரோனுக்கும், அவன் குமாரருக்கும் முன்பாக ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடைகளைச் செய்ய பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். எண்.8:5-22. ஒரு லேவியனும் ஆசாரியனே. உபா.17:20,27:9. இவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமப்பதற்கும், கர்த்தருடைய சந்நிதியிலே நின்று அவருக்கு ஆராதனை செய்கிறதற்கும், அவர் நாமத்தைக்கொண்டு ஜனங்களை ஆசீர்வதிப்பதற்கும் கர்த்தர் இவர்களை பிரித்தெடுத்தார். இந்த லேவியர் கர்த்தருடைய வேதபுத்தகத்தை வைத்துக்கொண்டு, யூதரின் பட்டணங்களிளெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதித்தார்கள். 2நாளா.17:8,9. ஜனங்களின் வியாச்சியங்களைத் தீர்த்துவைத்தார்கள். உபா.17:9. தேவாலயத்தின் பண்டசாலை மற்றும் பொக்கிஷ சாலைகளின் மேலுள்ள விசாரணை உத்தியோகமும் இவர்களுடையதாயிருந்தது. 1நாளா.9:26. இவர்கள் சங்கீதக்காரர்களுமாயிருந்தார்கள். 1நாளா.9:33.

8. லேவியருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில் முப்பது வயது முதல் ஐம்பது வயது வரைக்குமுள்ளவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடைவேலைக்கும், சுமையின் வேலைக்கும் உட்படத்தக்கவர்கள். லேவி.4:46. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி லேவியருக்குரிய கட்டளை என்ன வென்றால் இருபத்தைந்து வயது முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள யாவரும் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடைகளை செய்யும் சேனையிலே சேவிக்க வரவேண்டும். ஐம்பது வயதுக்கு மேற்கொண்டவர்கள் வேலைசெய்யாமல் திருப்பணி சேனையை விட்டு, ஆசரிப்புக் கூடாரத்தின் காவலைக் காக்கிறதற்கு தங்கள் சகோதரரோடே கூட ஊழியம் செய்வதேயன்றி, வேறொரு சேவகமும் செய்யவேண்டியதில்லை என்றார். எண்.8:23-26.

9. லேவியரின் வருமானம் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கென்று ஏறெடுத்துப்படைக்கும் படைப்பாகிய தசமபாகம் ஆகும். எண்.18:24. லேவியருக்கு இவர்கள் சகோதரரோடே பங்கும், சுதந்திரமும் இல்லை. கர்த்தரே இவனுக்குச் சுதந்திரம். உபா.10:8,9. தசமபாகமெல்லாம் கர்த்தருக்குரியது. அது கர்த்தருக்கு பரிசுத்தமானது. லேவி.27:30. யுத்தத்தில் கொள்ளையிடப்பட்டதை இரண்டு பங்காக பங்கிட்டு, யுத்தத்திற்கு படையெடுத்து போனவர்களுக்கும், சபை பாகத்துக்கும் கொடுக்க வேண்டும். சபை பங்கில் சகலவித மிருகங்களின் ஐம்பதுக்கு ஒன்று வீதம் லேவியருக்கு கொடுக்க வேண்டும். எண்.31:30. மேலும் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணியாட்சியாகிய சுதந்திரத்திலே லேவியருக்கு குடியிருப்பு பட்டணங்களைக் கொடுக்க வேண்டும், அந்தப் பட்டணங்களைச் சூழ்ந்திருக்கிற வெளிநிலங்களையும் கொடுக்க வேண்டும். எண்.35:2.

10. கர்த்தரின் ஆசாரியர்கள் தேவனுடைய பணிவிடைகாரர்கள். ஏசா.61:6. கர்த்தருடைய ஊழியக்காரர் ஆசாரியர். எரே.33:21. ஆரோனும் அவனுடனே கூட அவன் குமாரனும் ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அபிஷேகம் செய்து பிரதிஷ்டை பண்ணப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். யாத்.28:41. இவர்கள் பலிகளைச் செலுத்தினார்கள். முதற்பலன்களைப் படைத்தார்கள். லேவி.23:10,11. பொருத்தனை காணிக்கைகளை மதிப்பீடு செய்தார்கள். லேவி.27:8-25. ஆலயத்தின் திருப்பணிவிடைகளை நிறைவேற்றினார்கள். 1நாளா.28:13. உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்தார்கள். யோசு.3:3. ஜனங்களுக்கு வேதத்தைப் போதித்தார்கள். எஸ்றா.7:10,11. ஜனங்களின் வழக்குகளை தீர்த்துவைத்தார்கள். எண்.5:11,31. பூரிக்கைகளை முழங்கினார்கள். யோசு.6:4-16. ஜனங்களை யுத்தத்திற்கு போக உற்சாகப்படுத்தினார்கள். உபா.20:1. ஆலயத்தைப் பழுதுபார்த்தார்கள். 2இராஜா.12அதி. தீட்டை நியாயந்தீர்த்தார்கள். லேவி.12.அதி. கொள்ளைப்பொருளை பங்கீடு செய்தார்கள். எண்.13.அதி. இவர்களது வருமானம் பலி மற்றும் காணிக்கையில் பங்கு. லேவி.6:26,29. லேவியரின் தசமபாகத்தில் பத்தில் ஒன்று. எண்.18:28. முதற்பலன்கள் உபா.18:1-5. பட்டணங்களும் வெளிநிலங்களும் யோசு.21:1-3.

11. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி நீங்கள் என் வாக்கை உள்ளபடிக் கேட்டு, என் உடன்படிக்கைகளைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள், பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய இராஜ்யமும், பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்றார். யாத்.19:6. இன்று புறஜாதி விசுவாசிகளாகிய நாம், கண்டு விசுவாசியாமல் காணாமற் விசுவாசிக்கிற நாம் அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியகூட்டமாயும், பரிசுத்தஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமுமாயிருக்கிறோம். 1பேது.2:9. தேவன் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தம்முடைய இரக்கத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார். வெளி.1:6.

12. விசுவாசிகள் அனைவரும் தேவனுடைய குமாரனை பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், அதாவது 2பேது.1:5-8ன்படி விசுவாசத்திலும், தைரியத்திலும், ஞானத்திலும், இச்சையடக்கத்திலும், பொறுமையிலும், தேவபக்தியிலும், சகோதரசிநேகத்திலும், அன்பிலும் பெருகி பூரண புருஷராக வளரும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காகவும் கர்த்தர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கத்தரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகர்களாகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராயும் ஏற்படுத்தினார். எபே.4:11-13. பாருங்கள், சபை பக்திவிருத்திக்கு கர்த்தர் ஐந்துவகை ஊழியங்களை ஏற்படுத்தியுள்ளார். இவர்கள் ஊழியங்கொள்ளவராமல், ஊழியஞ்செய்யவந்தவர்கள். மாற்.10:43. ஆனால் இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் எனக் கூறும் உங்கள் பாஸ்டர்களை கவனித்துப் பாருங்கள். இவர்கள் ஊழியத்தின் பேரில் தங்களுக்கு சொந்தமாக பிறர் பணத்தைக்கொண்டு, பிறர் உழைப்பைக் கொண்டு, கர்த்தருக்குரிய தசமபாகத்தைக் கொண்டு, காணிக்கைகளைக் கொண்டு சபை பேரில் தங்களுக்கு கட்டிடங்களையும், வீடுகளையும் கட்டுகிறவர்களாயிருக்கிறார்கள். சொத்து சுகங்களைச் சேர்க்கிறவர்களாயிருக்கிறார்கள். இவர்களுடைய வஞ்சகத்தை அறிந்தும் ஒரு கூட்டம் ஜனங்கள் இவர்களுக்குப்பின் செல்லுகிறார்கள் என்றால், இவர்கள் கண் இருந்தும் குருடர்களே.

13. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய இந்த ஐந்துவகை ஊழியமும் கண்டிப்பாக தேவை. இந்த ஐந்துவகையான ஊழியத்தின் போதனைகள், உபதேசங்கள், நன்மைகள் இல்லாது சபை ஒருபோதும் பக்திவிருத்தியடைய முடியாது. இப்படியிருக்க ஒரு பாஸ்டரே எல்லாவற்றிற்கும் எல்லாம் என்ற ஊழியம் எப்படி தேவனால் நியமிக்கப்பட்டதாயிருக்கும்? எந்த ஒரு ஊழியமும் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக இருக்குமானால் அது தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியம் அல்ல. தேவனுக்கும் அந்த ஊழியத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது.

14. இந்த ஐந்துவகை ஊழியத்தையும் இயேசு கிறிஸ்து செய்தார். அவர் அப்போஸ்தலன். எபி.3:1. அவர் ஒரு தீர்க்கத்தரிசி. லூக்.24:19. அவர் சுவிசேஷகன். லூக்.4:18. அவர் ஒரு நல்ல மேய்ப்பன். யோ.10:11. அவர் ஒரு போதகனும் கூட. யோ.3:2, 13:14. சபைக்காலங்களில் இந்த ஐந்துவகை ஊழியங்களையும் அவர் தமது சரீரமாகிய சபையில் ஏற்படுத்தி, அதை பக்திவிருத்தியடையச் செய்து வருகிறார். எபே.4:11-13. கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்திக்கொள்ள அதை போஷித்துக்காப்பாற்றுகிறார்.

15. சபைக்காலங்களின் ஊழியர்களின் அட்டவணையை ரோ.12:7, 1கொரி.12:28 மற்றும் எபே.4:11-13 வசனங்களில் காணலாம். அப்போஸ்தலர், தீர்க்கத்தரிசி, சுவிசேஷகன் ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள சபைப்பணிக்கு நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. இவர்கள் பற்பல இடங்களுக்கு சென்று பணியாற்றி சபைகளை ஒழுங்குபடுத்தி அதை பக்திவிருத்தியடையச் செய்ய பிரயாசப்படுகிறவர்கள். இவர்களுக்கு

சபை அனைத்தின் மேலும் பொறுப்புகள் உண்டு. சுவிசேஷம் பரவாத இடங்களில் நற்செய்தி தொண்டு புரிவதும், நற்செய்தியை ஏற்றுக்கொண்டு, அதின் செம்பொருளை உணராதிருப்போர் உயிர்பிக்கப்பட பணியாற்றுவதும் இவர்களைச் சார்ந்தது. பாஸ்டர் (மேய்ப்பனுக்கு) ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள, தனது உக்கிராணப்பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட மந்தையை கண்காணிப்பது, போஷிப்பது ஆகும். இது ஒரு குறிப்பிட்ட சபை பதவியாகும். அப்.20:28, போதகர் தேவனுடைய வார்த்தையை சபை புரிந்துகொள்ள உதவியாயிருக்கிறார். இவர்கள் யாவரும் கர்த்தருக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் மட்டுமே ஊழியக்காரர்கள். சபையானது அப்போஸ்தலர், தீர்க்கத்தரிசிகள் என்பவருடைய அஸ்திவாரத்தின் மேல் கட்டப்படுகிறது. எபே.2:20. ஒரு பாஸ்டருடைய உபதேசத்தின்கீழ் சபை கட்டப்படுவதில்லை. ஆனால் இன்று பாஸ்டர்கள் தங்கள் உபதேசங்களை, கொள்கைகளை, பாரம்பரியங்களை சபைமக்கள் மீது திணிக்கிறார்கள். அது அவர் உண்மையான உக்கிராணக்காரன் அல்ல என்பதை நிரூபிக்கிறது.

16. உதாரணமாக விவாகத்தில் தாலி / மோதிரம் அணியப்படுகிறது. ஆனால் சில பாஸ்டர்கள் இந்த நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை அடையாளச் சின்னத்தை அணியக்கூடாது என உபதேசிக்கிறார்கள். இது குறித்து லவோதிக்கேயா சபைதூதனும், தீர்க்கத்தரிசியுமானவர் என்ன கூறுகிறார்? நசரீன் மக்களே, விவாக மோதிரத்தை அணிந்துள்ள ஒரு ஸ்திரீக்கு நீங்கள் ஞானஸ்நானம் கொடுப்பதில்லை. அந்த மனப்பான்மை அவசியமில்லை. வேதாகமக்காலத்தில் அவர்கள் விவாக மோதிரங்களை அணிந்திருந்தனர். அது தலைமாலை என்று அழைக்கப்பட்டது. அதை அவர்கள் தலையில் அணிந்துகொண்டிருந்தனர். அவர்கள் விவாகம் பண்ணினவர்கள் என்பதை காண்பிக்க. அது சரி என்று நான் நினைக்கிறேன் என்கிறார். கே.ப.283. பாருங்கள், இவர்கள் கடைசிக்கால செய்தி, செய்தி என வாய்கிழியப் பேசுகிறார்கள், ஆனால் இக்கடைசிக்கால செய்திக்கு முற்றிலுமாக கீழ்படிவதில்லை. மாறாக தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தி அதை சபைமக்கள் மீது திணிக்கிறார்கள். இவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. தாலி / மோதிரம் ஒரு பெண் புறம்பான அலங்கரிப்புக்காக அணிவதில்லை. அது அவள் விவாகமானவள் என்பதற்கு ஒரு அடையாளச் சின்னம். அவர்கள் திருமணத்தில் செய்யும் உடன்படிக்கையை நினைவூட்டும் ஒரு சின்னம். அதை அணியும் ஒரு பெண், தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் அவனது பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள் என்பதை நினைவூட்டும் சின்னம். நீங்கள் ஏதோ ஒரு ஆபரணம் அணிந்திருப்பதை வைத்துக்கொண்டு ஒரு ஊழியக்காரன் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க மறுத்தால் அது தவறு.

17. ஆக சபைக்காலங்களில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஐந்துவகை ஊழியத்தில் உள்ளவர்களே இன்று ஆசாரியரும் லேவியரும் ஆகும். கர்த்தருக்குரிய தசமபாகம் இவர்கள் அனைவருக்கும் உரியது. தசமபாகம் பண்டசாலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும். பண்டசாலை என்பது சபை. ஒவ்வொரு விசுவாசியும் சபைக்கு தங்கள் தசமபாகத்தைக் கொண்டுவந்து கொடுக்க, அது அங்கிருந்து ஐந்துவகை ஊழியங்களுக்கும் பகிர்ந்துக்கொடுக்கப்பட வேண்டும். காணிக்கை சபைக்குரியது. அதை சபைகாரியங்களுக்கு பயன்படுத்தலாம். கர்த்தருக்குரிய தசமபாகம் மற்றும் காணிக்கை இரண்டிற்கும் வித்தியாசம் உண்டு.

18. கர்த்தருக்குரிய தசமபாகத்தில் பங்குபெறும் ஊழியர்கள் கர்த்தரை சுதந்தரமாகக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். இந்நாட்களில் நமது மத்தியில் பார்த்தால், அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளில் பற்பல உத்தியோகங்களில் இருந்துகொண்டு, தங்களை பாஸ்டர்கள் என அழைத்துக்கொண்டு, அநேகர் தேவசித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்துகொண்டு, தசமபாகம், காணிக்கை மீது கண் வைத்து, தங்கள் வருமானத்துடன் ஒரு கூடுதல் வருமானமாக்கி உல்லாசமாக வாழ்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு வரும் ஆக்கினையிலிருந்து தப்பமுடியாது. இவர்கள் யாவரும் கள்ள, கபடமுள்ள வேலையாட்கள். இப்படிப்பட்டவர்களால் நடத்தப்படும் சபைக்கூடுதலில் பங்குகொள்ளாதீர்கள், அங்கு உங்கள் தசமபாகம் மற்றும் காணிக்கைகளைக் கொடுக்காதீர்கள். உங்கள் தசமபாகம் மற்றும் காணிக்கைகளை தண்ணீரில் கொண்டு போட்டுவிட்டு, நான் கர்த்தருக்குக் கொடுத்துவிட்டேன் என்றால், கர்த்தர் அதை ஒருக்காலும் அங்கீகரிப்பதில்லை. அது தண்ணீரில் போனது தான். ஆதலால் தசமபாகம் காணிக்கைக் கொடுப்பதை உதாரத்துவத்துடன் கொடுங்கள். ஏனோதானோ என்றுக் கொடுக்காதீர்கள். சகோ.ரவிக்குமார் ஏனோதானோவென்று ரூ.6,00,000/- தசமபாகமாகக் கொடுத்துவிட்டு, பின் மனஸ்தாபப்பட்டார். அதில் என்ன பிரயோஜனம்? தனக்குரியதல்லாத தசமபாகத்தையும் காணிக்கைகளையும் கொண்டு ஒரு ஊழியக்காரன் தனக்கு வீட்டைக்கட்டி, சொத்துசுகங்களை சேர்த்து, தான் வாங்கிய கடனுக்கு வட்டிகளை செலுத்தினால் அதை கர்த்தர் எப்படி அங்கீகரிப்பார்?

19. பத்தில் ஒரு பாகம் தசமபாகம் - தசமபாகம் அனைத்தும் - அவர்களுடைய ஆசாரியர்களுக்கு, அவர்களுடைய மேய்ப்பர்களுக்குச் சென்றது. ஆம், தசமபாகத்தை வேறெதற்கும் உபயோகிக்கக்கூடாது. தசமபாகம் கர்த்தருக்குரியது. ஆசாரியனாகிய லேவி தசமபாகத்தைக் கொண்டே வாழவேண்டும். தசமபாகம் பண்டசாலைக்கு கொண்டுவரப்பட வேண்டும். கே.ப.161. பண்டசாலை எது? அது நீங்கள் சென்று வரும் சபை. நீங்கள் தசமபாகம் செலுத்தும்போது, உண்மையாய் நீங்கள் எங்கு ஆகாரத்தை பெறுகிறீர்களோ, அங்குதான் நீங்கள் தசமபாகம் செலுத்தக் கடமைபட்டிருக்கிறீர்கள். உங்கள் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலைக்குக் கொண்டுவாருங்கள். கே.ப.307. பத்தி 183. சபை பக்திவிருத்திக்கு ஆகாரம் ஐந்துவகை ஊழியத்திலும் இருந்து வருகிறது. பாஸ்டரது ஊழியத்திலிருந்து மட்டும் அல்ல. பாஸ்டரது ஊழியம் மட்டுமே போதுமென்றால், இதர நான்கு ஊழியங்களும் தேவையில்லை. சபை ஐந்துவகை ஊழியங்களால் போஷிக்கப்படுவதால் சபை பண்டசாலைக்கு வரும் கர்த்தருக்குரிய தசமபாகம் ஐந்துவகை ஊழியத்திற்கும் பகிர்ந்துக்கொடுக்கப்பட வேண்டும். ஆசாரியனாகிய லேவி தசமபாகத்தைக் கொண்டே வாழ வேண்டும். ஆனால் இங்கு உலகபிரகாரமான வேலைகள் செய்து கொண்டு, அரசாங்க உத்தியோகங்களில் இருந்து கொண்டு, கர்த்தருக்குரிய தசமபாகத்தையும் பெற்று, இரு வகைகளில் வருமானங்களைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் ஒரு ஊழியக்காரன் தேவசித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று ஊழியம் செய்கிறவனாயிருக்கிறான். இப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டுகொண்டு அவர்களை விட்டுவிலகுங்கள். இக்காலத்திற்குரிய

செய்தியில் போலி ஊழியர்கள் அதிகமதிகம். இவர்களை தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே அடையாளம் கண்டுகொள்ள முடியும். ஏனென்றால் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே உண்மைக்கும் போலிக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்பார்கள். ஏனென்றால் களையும் கோதுமையும் அல்லேலூயா! ஸ்தோத்திரம்! சொல்லுகிறதே.

20. இந்த சபையிலிருந்து எனக்குச் சேரவேண்டிய பணத்தை நான் எடுத்துக்கொள்ளும் போதும், அல்லது கூட்டங்களில் எனக்கு கூடுதல் கிடைக்கும்போதும், நான் தசமபாகம் கொடுக்கிறேன். நான் அதை ஊழியர்களுக்குக் கொடுத்துவிட்டு, கூட்டங்களில் கிடைக்கும் மற்றதை ஊழியக்காரர்களுக்குக் கொடுக்கிறேன். ஒரு வாரத்துக்கு நூறு டாலர் சம்பளம் வாங்கிக்கொண்டு அதிலிருந்து என் தசமபாகத்தைச் செலுத்துகிறேன். கே.ப.307 பத்தி 184.

21. Tithes pay the preacher. He's to live off the tithes of the people. But we had to get something else….God's way is right. TITHES AND OFFERING GO TO LEVI, WHICH WAS THE MINISTERS. (Church choosing law for grace dt. 16.03.61) பாருங்கள் தசமபாகம் லேவிக்குரியது. சபைக்காலங்களில் லேவி, ஐந்துவகை ஊழியத்திலுள்ள ஊழியர்களாகும். பாஸ்டர் மட்டுமே லேவி என்பது ஒரு தவறான உபதேசம்.

22. அவர்களிடம் நல்ல மனிதர்கள் - லேவியர்கள் இருந்தனர். அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். இன்றைக்கு அப்படிப்பட்டவர்களை நாம் **போதகர்கள்** (The Ministers) என்று அழைக்கிறோம். லேவியர் தேவாலயப் பணிவிடை செய்தனர். (நான் ஏன் ஸ்தாபிக்கப்பட்ட மார்கத்துக்கு விரோதமாயுள்ளேன். பக்கம் 18, பத்தி 46) பாருங்கள் ஐந்துவகை ஊழியத்தில் உள்ளவர்கள் யாவரும் ஊழியக்காரர்கள் (Ministers) இவர்கள்தான் இன்றைய லேவியர். இங்கு Ministers என்பது போதகர்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது தவறு. **ஊழியர்கள்** என்றே இருக்கவேண்டும்.

23. His Ministers was His Levites. They had the burden of the word on their heart. You say **I am a Minister, anointed.** Then stay a Minister, don't try to be a Prophet, see? If you're Evangelist, stay Evangelist. (Trying to do God a service without it being God's will. Page 38, Para 233&234) பாருங்கள் தேவனுடைய ஊழியக்காரர்கள் எல்லோரும் (ஐந்துவகை ஊழியங்களில் உள்ள யாவரும்) அவருடைய லேவியர். அவர்கள் தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியை தங்கள் தோளில் சுமந்துகொண்டும், இருதயத்தில் சுமந்துகொண்டும் ஊழியம் செய்கிறவர்கள். அவர்கள் தசமபாகம் மற்றும் காணிக்கைக்காகவும், சபை கட்டிடம் கட்டுவதற்காகவும் இக்காலத்துக்குரிய செய்தியை தோளில் சுமந்துகொண்டு ஊழியம் செய்கிறவர்கள் அல்ல. நீ தேவனால் அபிஷேகம் பெற்ற ஒரு ஊழியக்காரனாய் ஊழியத்தில் தீர்க்கத்தரிசி என்றால் ஒரு தீர்க்கத்தரிசியின் ஊழியத்தைச் செய். நீ ஒரு சுவிசேஷகனானால் ஒரு சுவிசேஷகனுடைய ஊழியத்தைச் செய். ஏனென்றால் ஐந்துவகை ஊழியம் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தது. ஒன்றை மற்றோடு கலக்கக்கூடாது. பாஸ்டர் என்பவர் தன் உக்கிராணப் பொறுப்பிலுள்ள மந்தையை மட்டுமே மேய்க்கும் பணியைச் செய்யவேண்டும். அதை விட்டுவிட்டு ஊர்ஊராக, சபைசபையாக சுற்றித்திரியக்கூடாது. ஒருவன் அப்படிச்செய்வானாகில் அவன் தேவசித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவன்.

**24. திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவர்கள் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்க வேண்டும். கலா.6:6. சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டு. 1கொரி.9:14. சபை பக்திவிருத்திக்கு சுவிசேஷ ஊழியத்தில் உள்ளவர்கள் எங்கு சென்று பிரசங்கிப்பார்கள்? உபதேசிப்பார்கள்? சபைகளிலே! சமாதானத்தைக் கூறுகிற, தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்துகிற, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்துகிற சுவிசேஷகர்கள் ஆசாரியர்களே. நாகூ.1:15, ஏசா.52:7,ரோ.15:15. அப்படியானால் சபைதான் அவர்களையும் போஷிக்கவேண்டும். சபை எதிலிருந்து சுவிசேஷகர்களைப் போஷிக்கும்? கர்த்தருக்குரிய தசமபாகத்திலிருந்தே. ஆதலால் சபைக்கு வரும் கர்த்தருக்குரிய தசமபாகத்தில் ஐந்துவகை ஊழியங்களுக்கும் பங்கு உண்டு. பவுல், பிலிப்பு போன்றவர்கள் மக்கெதோனியா, தெசலோனிக்கே சபையினால் பராமரிக்கப்பட்டனர் ஒரு விசுவாசி திருவசனத்தில் தன்னை உபதேசிக்காதவனுக்கு, ஞான நன்மைகளை தனக்கு விதைக்காதவனுக்கு தன் சரீர நன்மைகளை, கர்த்தருக்குரிய தசமபாகத்தைக் கொடுக்கக் கூடாது. கலா.6:6, 1கொரி.9:11.**

25. முடிவாக, கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைய ஐந்துவகையான ஊழியங்களை ஏற்படுத்தியுள்ளார். இந்த ஐந்துவகை ஊழியங்களைக்கொண்டு சபை பக்திவிருத்தி அடையவேண்டும். இவர்கள் தான் சபைக்காலத்தில் சபைக்குரிய லேவியரும் ஆசாரியரும். ஆதலால் சபைக்கு வரும் தசமபாகத்தில் இந்த ஐந்துவகை ஊழியங்களுக்கும் பங்கு உண்டு. பண்டசாலையாகிய சபைக்கு வரும் கர்த்தருக்குரிய தசமபாகம் இந்த ஐந்துவகை ஊழியங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும். ஒரு மேய்ப்பன் ஐந்துவகை ஊழியங்களையும் தனது மந்தைக்கு ஆகாரமாக பிரயோஜனப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அந்த சபை சத்தியத்துக்கு தூணும், ஆதாரமுமாகக் காணப்படும். பாஸ்டர் தான் எல்லாவற்றிலும் எல்லாம் என்ற ஊழியம் தேவசித்தத்துக்குப் புறம்பானது.

26. கர்த்தருக்குரிய தசமபாகம் குறித்து எனது இந்த இரண்டாவது செய்தித்தொகுப்பு உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்திச் செல்லுமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். உங்கள் காரியங்கலெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்களெல்லாரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

டிசம்பர், 2002.

கிறிஸ்துவின் அன்பில்
***சகோ. காலேப் யோசுவா***